சே. ம. சூ. து.



# பஜனை கீர்த்தனைகள்.

8-MAR 1934
MADRAS

இயற்றியது

**M. சின்னப்பா**

புதூர்.

186216.

**1934**

செங்கல்பட்டு ஸெயின்ட் ஜோஸப் ஆர்பனேஜ் பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

186216.

**N. B.** சிறியோன் இயற்றிய பாட்டுகளில் பிழை இருப்பின் திருத்தி வாசிக்கவும். சமயோசிதம்போல் இராக தாளங்களை, மாற்றிக்கொள்ளலாம்.

M. C. R.

✠

சே. ம. சு. தி.

# பஜனை கீர்த்தனைகள்.

## கஜமுகவதனா. எ. வ. மெ.

பல்லவி.

1. ஏசுநாயகனே எமையாதரியே
சேயர்க்கருள்வாய் தினமும்மை நயவாய்

அனுசரணங்கள்.

மாமரிபாலா வரமருள்சீலா
வாக்குடன் அருள்வாய்
வந்தெம்மையாள்வாய்.
மானிடர்க்காக மானிலத்தினிலுதித்த (ஏசு)

தருணமீதே தயவுடனெம்மை
தற்காத்தருள்வாய்
தயபரநேசா.
சரணமென்றுன்னையே சந்ததமும் போற்றினேன். (ஏசு)

8-MAR 1934

18626

## பூங்காவினோதமே எ. வ. மெ.

பல்லவி.

2. என்ன சிங்காரமே லூர்துமாமரி தீரகம்பீரமே

மகுடங்கள்.

எத்திக்கும் தித்திக்கும் அருள்மறை
பத்திக்கும் புத்திக்கும் பெருநிறை.

எங்கும் பொங்கும் சுடரொளி
இங்கும் தங்கும் நடநளி

சிரந்தனிலே கதிரோன் அணி
கரந்தனிலே சுதனோன் பணி

பொன்னுலகம் தன்னிலுரை அமரரும்
இன்னிலம்வாழ் மன்னர்களும் தினம்புகழ்

சுகிர்தப் பரவொளி அடையக் கருதிடும்
மகிமைப் பிரபல முனிவர் பணிவதும்.

காலைமாலையும்சதா
சாக்ஷாத்கடவுளை தாங்கிநிற்பதம்

கோடான கோடிபுகழ்
பாடகர் நீடி தேடி பாடுதல்.

சரணங்கள்.

அன்னையே உந்தனின் ஏழைபிள்ளை யானுமல்லவோ
முன்னை பகர்ந்தாரே திருகுமாரனார் சொல்லவோ
பன்னி அழுதாலும் உந்தன் மனமிறங்கா கல்லோ
இன்னிலத்தில் துணையுண்டோ உன்னையன்றிச் சொல்லு
என்னைச்சொன்னாலும் நிகராமோ
அன்னையே உமக்கு இதுபாரமோ
உன்னிடத்தருளுங் குறையுமோ
என்னை யாதரிக்கவும் வர்மமோ
என்னிலமும் உன்னைவேண்டும்
சின்னான் துதிதன்னில்வர.

1979
784.0956

பர்வதராஜ குமாரி எ. வ. மெ.

பல்லவி.

3. அம்மணி ஆரோக்ய மரியாயே
அனை நீயே துணைஈயே சுதன்தாயே

அனுபல்லவி.

சூசைமாமுனியின் நேசபத்தினியே
காசினியோர்புகழ் வாசஸ்தானியே

சரணங்கள்.

பாவலர் பாடித்தொழும் பாப விமோசனியே
காவலர் கூடிப்போற்றும் கனக பூஷணியே

தேடினேன் உந்தனிருதாளே இந்த நாளே
புவி மேலே நாடி னுலே.

தீதுயாவும் தீர சோதிபாதம் சேர
ஆதிவேதம் தர நீதிநாதன் பர
லோகத்தின் ராக்கினி நீயே எந்தன் தாயே
மேலன் பாயே ஈவாயே.

கரைகாணு கடலின் நக்ஷத்ர கிரீடி
இரைவன் தாவீதினின் குக்ஷேத்ர மாடி
இன்னுமேன் எந்தன்மீது வர்மமா உந்தன் மர்மமா
இது தர்மமா நன்மரி யம்மா.

அன்னையே நீயே ஆதரிப் பாயே
சின்னுனின் தாயே தீதகற்றியே
உன்னையன்றி வேரு யாருதுணை கூரு
ஏணைகாரு கண்பாரு.

## என் கண்ணே எ. வ. மெ.

பல்லவி.

4. ஏழை எந்தன் மீதினிலே கோபம் ஏனம்மா

அனுபல்லவி.

186216

கோபம் ஏனோ கூருவாய்
தாமதம் தான் சொல்லுவாய்

சரணங்கள்.

தயே கன்னிமாமரி சேயனையே ஆதரி
ஏனோஇத் தாமதம் சரி தானோ எந்தன் மீதுன்
கோபம் ஏனம்மா

மன்னர் மன்னகுலத்தியே மீன்முடி சிரத்தியே
இன்னல் தனையொழி உன் வரமதைபொழிய
கோபம் ஏனம்மா

சூசைமுனி பத்தினி ஆசைமிகு வித்தனி
பூசித்தேனுன்னையே நேசித்தேன் அன்னையே
கோபம் ஏனம்மா

இன்னிலத்தின் ராக்கினி மின்னுமணி பதத்தினி
இன்னல்தனை போக்கி நன்வரத்தையே நோக்க
கோபம் ஏனம்மா.

பல்லவி.

5. சர்வ லோகம் புகழும் ராஜேஸ்வரியே

அனுசரணங்கள்.

பாருலக ராக்கினி மேலுலக சிலாக்கினி
வரமேதாரும் யோக்கினி சிரம்பணிந்தேன் அனேயே

வேதியர்க்கு வேலியே தீதகன்ற சீலியே
மாயபேயை சீறியே பாரனைவேண்டும் அனேயே

சூசைமுனி பத்தினி நேசமிகு வித்தினி
ஆசையுடன் கார்கனி கருணைகாரனின் அனேயே

பன்னிருடு சிறத்தி மனனர்குல வரத்தி
சின்னனுமையே யேத்தி போற்றினேனே அனேயே.

சாந்தமுலேக எ. வ. மெ.

பல்லவி.

6. இன்னில ராணி நன்னில ஏணி
கன்னியெனும் திருமணி

அனுபல்லவி.

அன்னையெனும் மரி என்னை நீ யாதரி

சரணங்கள்.

மன்னுதி மன்னர்குல கன்மமில்லா தபல
மின்னல் போலுதித்தாயே முன்னிலதுதி நீயே

வருவாய் வருவாயென்று வழிபார்த்திருந்தே னம்மா
கருவாய் உதித்த சேயின் அழியாத வரம் தாரும்
இன்னுமென்னத் தாமதம் கன்னியே வுந்தன்பதம்
சின்னுனென் துதிநிதம் உன்னருள் கதிசதம்.

மாதாட பாராதேனே எ. வ. மெ. (கமாஸ்).

பல்லவி.

7. சிந்தைகுறையை தீர்ப்பாய் திக்கில்லை தயே

அனுபல்லவி.

வந்தித்து நெடுநாளே வாழ்த்துகிறேனுன் தாளே
எந்தன்மொழியை கேளே இலங்கு மரியம்மளே

சரணங்கள்.

இற்றயவரை நானேர் இன்னனு ராத துபோல்
மற்றய நாளில்காத்து மகிழ்விப்பாய் புவியின்மேல்
பற்பல அற்புதங்கள் பாறிற் காட்டிய அன்னே
சிற்றறியேன் யென்சொல்வேன் சீர்த்தினே இன்னே
இப்புவியில் போற்றும் இலங்கும் உன் சுருபத்தை
தப்பில்லாமல் துதித்தேன் தந்தருளே வரத்தை
ஆயுளா ரோக்கியத்தை யளிப்பாய் தயைபுரிந்தே
நேயமுடனுன் பாதம் நினைந்து வாடுறேனேந்து
நற்றவநின் புகழை நாத்தழும் புறவாழ்த்தி
உற்றபத்தி கிருத்தியம் ஓங்கசெய்வாய் காப்பாத்தி
என்னகத் துற்றகுறை எல்லாமே நீயறிவாய்
சின்னுனுன்னை நம்பினேன் வுதவிதுணை புரிவாய்.

ஐங்கரனுக்கிளைய எ. வ. மெ.

கண்ணிகள்.

8. கன்னிமரியே தாயே கவலையை தீர்ப்பயே
உன்னையே நம்பினேனே என்மனமது
பின்னேவும் நாடலையே

உதயதாரகை யெனும் நக்ஷத்ர கிரீடியே
அபயந்த தாளுவாயே நிக்ஷயமாய்
இதயத்தில் நாட்டுவாயே

அமலனை ஈன்றதாயே விமலிநீ வருவாயே
கமலபாதந் தொழ்வே எந்தன்மனம்
கலங்காமலிருக்கச் செய்யே

மன்னுதி மன்னர்கோத்ரி சுவக்கின் அன்னம்மாள்புத்ரி
பன்னுளும் உன்னைத்தொழும் சேயன் சிரு
சின்னனை கார்க்கவேணும்.

## சுயாராஜ்யமதிக தூரமில்லை எ. வ. மெ.

பல்லவி.

9. மன்னர்குலத்துதித்த மன்னன் சூசைமுனியே என்
இன்னல் தனையொழித்தே அன்பாய் நீ ஆதரியே

அனுபல்லவி.

அன்பாய் நீ ஆதரி அருள்தனையே வாரி
மன்னவா உன்னை கோரி வந்தேனே யானே பாரி

சரணங்கள்.

மாயவுலகத்தில் சேயனுக்கேது துணை
ஆயனையே வேண்டி ஆதரி எந்தனையே
காருமே வாரும் கார்க்கவே நீரும்
மார்க்கம் தனிலென்னை சேர்க்கவே பாரும்

கன்மவினையில் சிக்கி கதரி அலைகிறேனே
அன்புடனே வந்து ஆதரிக்கவே தானே
கோடான கோடி நமஸ்காரம் பாடி
கும்பிட்டேன் பாதந்தன்னை இம்மையில் தேடி

தாழ்மையெனும் அரும் தங்க பொக்கிஷத்திலே
ஏழையை சேர்ப்பிக்க பெரும்திரு பதத்திலே
சாஷ்டாங்க தண்டம் சமர்பித்தேன் அய்யா
புஷ்பலீலி மலர் ஏந்திய கையா.

## கோபம் செய்யாதே எ. வ. மெ.

பல்லவி.

10. சூசைமாமுனியே ஆசிகூருவாய்

அனுபல்லவி.

தரித்திரகுடும்ப சரித்திரபாடமே ஆசிகூருவாய்

சரணங்கள்.

லீலிபுலர்த்தாங்கி பாரினில் பேரோங்க
சிலன்பாலனையே ஏந்தியகரமதால் ஆசிகூருவாய்

மன்னர் சபைதனில் மின்னல்போல் நின்றவா
இன்னல்தனை நீக்கி நன்னருள்பொழிய ஆசிகூருவாய்

சர்வநன்மைதர அம்பரனைவேண்டி
மரியன்னையை மணந்ததிருகரமதில் ஆசிகூருவாய்

சத்தியமாகவே நித்தியம் காத்தருள்
இத்ததிவேண்டினேன் முத்திதரவேவுன் ஆசிகூருவாய்

## உண்மை உறை எ. வ. மெ. (இந்துஸ்தான் மெ.)

கண்ணிகள்.

11. சேசுவை வளர்த்த நேசத்திருத்தாதையே
ஓ ஹோ நேசத்திருத்தாதையே
ஆ ஹா நேசத்திருத்தாதையே
உமைதேடினேனே
துதிபாடினேனே

உமைதேடி துதிபாடினேனே பாதசரணமை
பாரிலுள்ளோர் மெச்ச
தச்சுவேலையை செய்தவா
ஓஹோ. தச்சுவேலை செய்தவா
ஆ. ஹா. இச்சபையிலிய்யவா
கோடானகோடி
வானதூதர்பாடி

வசனம்.

வானுலகம்சேர் ஆடினூர்பாடி தேனுலகம் சேரவே
கர்த்தனை ஈன்ற
கன்னிகையை காத்தவா
ஓஹோ கன்னிகையை காத்தவா
ஆஹா சின்னூனையே கார்க்கவா
உன் காவலினல்
இன்னிலத்தோர்க்கு
நன்மைபவவும் புரிபவா கன்மவினையைநீக்க

மறந்து போனேன் எ. வ. மெ.

கண்ணிகள்.

12. தேதன்பூங்கொடி விருதேந்திய
மென்மைமுனியே சிலாக்ய
கானின்வளர் நற்றவத்தோய்
ஏனின்வர தாமதித்தாய்
தச்சுவேலை மெச்சும்படி
இச்சடலமதில் செய்தோய்
சர்ஜனர்கள் தாதையென
பார்தனிலே வேதர் ஓத
பாவமாசு ஏதுமில்லா
பரமஞான மாமுனிமே
ஜீவியமானமார்க்கமே
பாவியெனக்கு சொர்க்கமே

கன்னிமரி காவலனே
சின்னுன் பரிபாலகனே
அன்பனேஉன் ஆசிரதை
இன்புடநீதாசனுக்கு

வெளியில்சொன்னுல் எ. வ. மெ.

பல்லவி.

13. தந்தையென்று நான் சிந்தைமகிழ்ந்து
உந்தனிடம் வந்தேன்

அனுபல்லவி.

எத்தனைநாளுமே சித்தமிரங்காதோ
இத்ததிவேண்டினேன் முத்திதரயெந்தன்

சரணங்கள்.

ஆதாமேவையின் தீறுதனைநீக்க
பூதலந்தன்னில் நின்றோய்
சோதிநாதன் திருதாதையென உன்னை
வேதவேதியர்கள் நித்தம்துதித்திடும்

கற்புக்கரசியை பொற்புடன்மணந்த
அற்புதகுருசை ஐயா,
இற்றரைமீதினில் பற்றின்றிவாடுறேன்
நற்றவாவந்துன் உற்றவரம்தர

இன்னுமென்ன உந்தன் பொன்மனமிறங்க
என்னதாமதம் தானே
இன்புடனேவேண்டி அன்புடனேதொழும்
சின்னுனென்குறையை மன்னிக்கவே எந்தன்

சுருளிமலை மீதுமேவும் சீலா எ. வ. மெ.

கண்ணிகள்.

14. அண்டினவர் அடைக்கலம் ஐயா வரம்
அடர்ந்தலீலி மலரின்கையா என்னை
ஆதரிக்கவா யென்றுன்னில்
அலரி அழுதேனையா வாரும் குறைதீரும்

பஞ்சபூதநெஞ்சதனுல் அஞ்சி அரும்
செஞ்சரணமதையேயான் கெஞ்சி உந்தன்
தஞ்சமென்று அஞ்சாமலே
கெஞ்சுகிறேன் தந்தையே யான் ஐயா சூசைமெய்யா

தந்தையேவுன் தனயன்யான் அல்லோ இத்
தாமதம் செய்தலும் இனிநல்லோ திரு
தாய்மரியின் ஆயனேயும்
நேயமுடன் ஆதரித்த நெஞ்சம்வர தஞ்சம்

எத்தனேயும் தான் சொல்லினும்—ஐயா இனி
சித்தம்இறங்கிகாரும் துய்யா சின்னுன்
இத்தலத்தில் வேண்டுகிறேன்
நித்தியமும்கார்க்கவரம் தாரும் கண்பாரும்

## மங்களம்.

### பல்லவி.

15. மாமரியின்மகனுய் புவியிலவதரித்த
சேசுநாதமங்களம்

### அனுசரணங்கள்.

அன்னேமாமரி சிர்பாதமங்களம்
அன்பன்மாதவ திருசூசைமாமுனிமங்களம்

பாலர்கள்கூடி வும்பாதத்தைநாடி
கால கால மாக கூடகருத்துடனேமங்களம்

சத்தியவேத சபையோர்க்குமங்களம்
சத்தியவேதம் தழைத்தோங்க ஜெகந்தனில்மங்களம்

சமரசபஜனு சந்ததம்மங்களம்
விமரிசையாய் பாடுவோர்க்கும் வேதியார்க்கும்மங்களம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

186216